தினமணி





# ஸ்ரீ பாலாஜி மருத்துவக் கல்லூரி–ஜோஹோ கார்ப்பரேஷன் புரிந்துணர்வு ஒப்பந்தம்



புரிந்துணர்வு ஒப்பந்தம் பரிமாற்ற நிகழ்ச்சியில் ஜோஹோ தலைமைச் செயல் அதிகாரி மணிகண்டன் வேம்பு, ஸ்ரீ பாலாஜி மருத்துவக் கல்லூரி முதல்வர் ஜான்சன், ஸ்ரீ பாலாஜி மருத்துவக் குழும நிர்வாக இயக்குநர் என்.இளமாறன், தலைவர் டாக்டர் ஸ்ரீ நிஷா, ஆஸ்திரேலிய வர்த்தக மற்றும் முதலீட்டு நிறுவன இயக்குநர் காம்ரான் கான் உள்ளிட்டோர்.

**தாம்பரம், அக். 22:** சென்னை குரோம்பேட்டை ஸ்ரீபாலாஜி மருத்துவக் கல்லூரி, மருத்துவத் துறைத் தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் மற்றும் மருத்துவ உபகரணத் தயாரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் ஜோஹோ கார்ப்பரேஷன் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளும் நிகழ்ச்சி வியாழக்கிழமை நடைபெற்றது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ஸ்ரீ பாலாஜி மருத்துவக் கல்லூரி முதல்வர் ஜான்சன், ஜோஹோ கார்ப்பரேஷன் தலைமைச் செயல் அதிகாரி மணிகண்டன் வேம்பு ஆகியோர் கையெழுத்திட்டு பரிமாறிக் கொண்டனர்.

இது குறித்து ஸ்ரீ பாலாஜி மருத்துவக் குழுமத் தலைவர் டாக்டர் ஜெ.ஸ்ரீநிஷா செய்தியாளர்களிடம் கூறியதாவது: மருத்துவக் கல்வி, சேவை மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டு ஸ்ரீ பாலாஜி மருத்துவக் குழுமம், மருத்துவத் தகவல் தொடர்பு தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேம்படுத்தும் வகையில் கைப்பேசி, தகவல் தொடர்பு தொழில் நுட்பம், மருத்துவச் சேவை, ஆராய்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் ஜோஹோ கார்ப்பரேஷன் நிறுவனத்துடன் இணைந்து மருத்துவக் கல்வி, சேவை மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேம்படுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

இதன் மூலம் மருத்துவத் துறையில் நவீன தொழில்நுட்ப முன்னேற்றம் ஏற்படும். மருத்துவச் சேவைகளில் வியக்கத்தக்க மாற்றங்கள் உருவாக வாய்ப்புள்ளது என்றார் அவர்.

ஜோஹோ கார்ப்பரேஷன் தலைமைச் செயல் அதிகாரி மணிகண்டன் வேம்பு பேசுகையில், இந்தியா மற்றும் வளர்ந்து வரும் நாடுகளின் மருத்துவத்துறையில் வியக்கத்தக்க வளர்ச்சி, மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் தொழில்நுட்ப விரிவாக்க நடவடிக்கைகளை மேம்படுத்த இந்த ஒப்பந்தம் உறுதுணை புரியும் என்றார்.

சிறப்பு விருந்தினரும், ஆஸ்திரேலிய வர்த்தக மற்றும் முதலீட்டு நிறுவனம் இயக்குநர் காம்ரான் கான் ஆஸ்திரேலிய மருத்துவ சேவைத் துறையில் உள்ள வாய்ப்புகள் குறித்து விவரித்தார்.

ஜோஹோவின் மற்றொரு பிரிவான வி.டைட்டான் வர்த்தகப் பிரிவுத் தலைவர் ஜி.என்.பாலகிருஷ்ணன், ஜோஹோ தயாரிப்புகள் பொறுப்புத் தலைவர் விஜயகுமார் ராஜேந்திரன், ஸ்ரீ பாலாஜி மருத்துவக் குழுமம் நிர்வாக இயக்குநர் என்.இளமாறன், கல்வி ஆலோசகர் வீரபாகு, பதிவாளர் எஸ். பூமிநாதன், ஆராய்ச்சித் துறை இயக்குநர் ராமசாமி, மருத்துவக் கண்காணிப்பாளர் சசிக்குமார், மருத்துவர்கள் கோபி அய்யாசாமி, கார்த்திகேயன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# SREE BALAJI MEDICAL COLLEGE AND HOSPITAL

**Chromepet, Chennai.**

*Cordially Invites You to the*

## MEMORANDUM OF UNDERSTANDING

*Signing Ceremony*

*With*

**ZOHO CORPORATION**

*for*

# INTEGRATED TECHNOLOGY AND TELE - MEDICINE HEALTHCARE INNOVATION

**IN THE PRESENCE OF**

### Dr. J. Srinisha
**Chairperson**
Sree Balaji Group of Institutions

### Mr. N. Elamaran
**Managing Director**
Sree Balaji Group of Institutions

*Special Invitee*

### Mr. KAMRAN KHAN
**Director**
**South Asia Infrastructure and Cities**
**Australian Trade and Investment Commission**
**Australian Government**

### Dr. S. Bhuminathan
Registrar
Bharath Institute of Higher Education & Research

### Dr. W.M.S. Johnson
Dean
Sree Balaji Medical College and Hospital

### Dr. P. Sasikumar
Medical Superintendent
Sree Balaji Medical College and Hospital

### Mr. Manikandan Vembu
Chief Operating Officer (COO)
ZOHO Corporation

### Mr. Balakrishnan G.N
Director, Medical Mine India Private Ltd
Head-Sales Operation, vTitan Corporation

### Mr. Vijayakumar Rajendran
Head - Product Development
ZOHO Corporation

*On* **21st October 2021 (Thursday) at 2:30 P.M.**

at Sree Balaji Medical College and Hospital, Chromepet, Chennai.